# மாதர் போதினி

OFFICE OF THE REGISTRAR OF BOOKS 20 DEC 1920


No. 275 டிசம்பர் 1920 No. 12


## A CHRISTMAS GREETING

## ஓர் கிறிஸ்து ஜனன வாழ்த்து

'God with us'
'Christ in you'

'தேவன் நம்மோடிருக்கிறார்'
'கிறிஸ்து உங்களில்'

கிறிஸ்மஸ் தினத்தை எவ்வாறு எதிர்பார்க்கிறோம்? அநேகருக்கு கிறிஸ்மஸ் என்றால் புது வஸ்திரம் உடுத்துவதும், பிறரிடமிருந்து வெகுமதிகளைப் பெறுவதும், நல்ல பக்ஷணங்களைப் புசிப்பதும், சிநேகருக்கும் பெரியோருக்கும் வெகுமதி அனுப்புவதும்தான். இயேசு இரட்சகர் முதல் கிறிஸ்மஸ் அன்று தம்மை வெறுமையாக்கி அடிமையின் ரூபமெடுத்து மனுஷர் சாயலாகி, மனுஷர் அவர் தரித்திரத்தால் ஐசுவரியவான்களாகும்படி மனுவுருக்கொன்று தரித்திரரானார்.

இதை உணர்ந்து இயேசுவை ஏற்றுக்கொண்டு, அவருடைய மாதிரிப்படி குறைவுள்ளவர்கள் குறையை நிறைவாக்குவதே சரியான கிறிஸ்மஸ் பண்டிகையாகும்.

கிறிஸ்மஸ் அன்று யார் வீட்டில் கிறிஸ்து போஜனம் பண்ணுகிறாரோ, யார் வீட்டில் அவரைக் காணலாமோ, அவர்களுக்கே கிறிஸ்மஸ் சந்தோஷம் கிடைக்கும். உனக்கு கிறிஸ்மஸ் சந்தோஷம் உண்டாவதாக வென்று பிறர் நம்மை வாழ்த்துவதாலும், நாம் பிறரை வெறும் எழுத்தாலும் வார்த்தையாலும் வாழ்த்துவதாலும் கிறிஸ்மஸ் சந்தோஷம் உண்டாவதேயில்லை.

பசியாயிருந்தேன் எனக்கு போஜனங் கொடுத்தீர்கள், தாகமாயிருந்தேன் என் தாகத்தைத் தீர்த்தீர்கள், வஸ்திரமில்லாதிருந்தேன் வஸ்திரங் கொடுத்தீர்கள், வியாதியாயிருந்தேன் பார்க்கவந்தீர்கள் என்று நம்மைக்குறித்துச் சொல்லப்படுமா?

சகோதரியே, எத்தனையோ கிறிஸ்மஸ் தினங்களில் உண்மையான கிறிஸ்மஸ் சந்தோஷத்தைப் போக்கடித்திருக்கிறாய். இந்த கிறிஸ்மஸ் உனக்கு எப்படி யிருக்கப்போகிறது? கிறிஸ்து உனக்குள் இருக்கிறாரா? உன் வீட்டில் அவரைக் காணலாமா? இன்னொரு கிறிஸ்மஸ் உனக்கு வருமோ? தெரியாது. சீக்கிரம் துரிதமாய்க் கிறிஸ்துவை ஏற்றுக்கொள். அவர் உன்னில் வாசம்பண்ண விரும்புகிறார். அவர் இம்மானுவேல். அவர் உன்னிலிருந்தால் அவரைப்போல் தாழ்மையும், அவர் நிமித்தம் பிறருக்காக உன்னை நீ வெறுமையாக்கிக்கொள்வதும், அடையாளமாகும். நீ புது வஸ்திரம் உடுத்தாவிட்டாலும் பரவாயில்லை. வஸ்திரமில்லாதோருக்கு வஸ்திரங் கொடுத்தால், கிறிஸ்துவின் ஆடை உன்னை அலங்கரிக்கும். நீ ருசிகர பக்ஷணங்கள் சாப்பிடாவிட்டாலும் பரவாயில்லை, உணவில்லாமல் பசியாயிருப்போரைப் பசியமர்த்து. கிறிஸ்து உன் ஜீவ அப்பமாய் இருக்கிறார்.

ஜெபம். இயேசுவே, உம்மைப் பார்க்க ஆசையாயிருக்கிறேன். சகேயு வீட்டுக்குப் போனமாதிரி என் வீட்டுக்கு வாரும். உம்மை சந்தோஷமாய் ஏற்றுக்கொள்வேன். சகேயு விட்டமாதிரி, கொடுத்துத் தீர்த்தமாதிரி, எதை விடவேண்டியதோ எதைக் கொடுத்துவிடவேண்டியதோ கீழ்ப்படிய ஆயத்தமாயிருக்கிறேன்.

நீர் என் சரீரமாகிய வீட்டில் வாசஞ்செய்ய அதை உமக்குப் படைக்கிறேன். என் ஆவி ஆத்துமா மாத்திரமல்ல சரீரத்தையும் படைக்கிறேன். ஏற்றுக்கொண்டு என்னில் வாசஞ்செய்யும். கிறிஸ்து என் சரீரத்தில் வாசஞ்செய்யும்போது, என் சரீரம் பாவத்துக்குச் செத்து நீதிக்குப் பிழைத்திருக்கிறது என்றறிந்து துதிக்கிறேன் ஆமென்.

ஜாக்கிரதையாய்க் கிறிஸ்து உன்னில் வாசஞ்செய்யப் பார். அவர் ஆசையோடு காத்திருக்கிறார். நீதான் இடங்கொடுக்கவேண்டியது.

## SUMMER SCHOOL AT ENNORE FOR EVANGELISTIC WOMEN WORKERS

## சுவிசேஷப் படைமுயற்சி ஊழியருக்கென்று என்னூரில் ஞானோதய வித்தியாசாலை

சுவிசேஷ ஊழியஞ் செய்ய வாஞ்சையுள்ளவர்களையும் இதற்கு முன் ஊழியஞ்செய்துகொண்டு வந்திருப்பவர்களையும் ஒன்றாய்க் கூட்டி ஐக்கியப்படுத்தி, பிரத்தியேகமான இடத்தில் ஒன்றாய்ச்

சேர்த்து, பலவித தொழில் தொல்லைகளை மறந்து வேதவசனத்தாலும், ஜெபத்தாலும், ஸ்தோத்திரத்தாலும், ஒன்றுசேர்ந்த சம்பாஷணைகளாலும், ஆவிக்குரிய பிரசங்கங்களாலும், சுற்றிலுமுள்ள கிராம ஹிந்துக்களைச் சந்தித்துக் கிறிஸ்துவைப்பற்றி சாட்சிசொல்லிப் பேசுவதாலும், ஆவியில் எழுப்புதலும் புதுப்பெலனும் ஜீவனும் நிறைவாய் அடையச்செய்வதனல் திரும்பித் தங்கள் ஸ்தானத்திற்கு வரும்போது பலனுள்ள வல்லமையான ஊழியஞ்செய்ய சக்தி கிடைக்குமென்ற நம்பிக்கையோடே இவ்வித ஞானோதய வித்தியாசாலை சென்னைக் கருகிலிருக்கும் என்னூரில் 1921-ம் வருஷம் ஜனுவரிமாதம் 13-ம் தேதி முதல் 16-ம் தேதி வரை நடக்கும். இதற்கு சுவிசேஷ ஊழியஞ்செய்வதில் கருத்துள்ள எல்லாப் பெண்களும் வரலாம்.

இதற்கு ஆயத்தமாக அப்போஸ்தலர் நடபடிகள் 1–17 அதிகாரங்களை (1) விசுவாசம், (2) ஜெபம், (3) பரிசுத்தாவியானவர், (4) பிரசங்கித்தல் முதலிய பொருட்களை மனத்தில் கொண்டு அவைகளுக்கேற்க ஆயத்தஞ் செய்துவந்தால் Bible Circle வேதஆராய்ச்சிக் கூட்டத்திற்கு உதவியாயிருக்கும்.

சென்னைக்கும் என்னூருக்கும் ரெயில் செலவு Central Station இல் இருந்து $2\frac{1}{4}$ அணு மாத்திரம்தான்.

சென்னையிலிருந்து மாத்திரமல்ல, தஞ்சை, திருச்சி, மதுரை, மானமதுரை, வேலூர், இன்னும் மற்ற தமிழ்நாடுகளிலுமிருந்து பெண்கள் யாராலும் வரலாம். கூட்டங்களில் பேசப்படும் பாஷை தமிழ்தான். Bible Circleஇல் மாத்திரம் ஓர் தெலுங்கு பாகமிருக்கும்.

இதை நினைத்து ஆயத்தஜெபஞ் செய்யும்படி எற்கனவே அறிவிக்கிறோம்.

இதற்கு வரப் பிரியமானவர்கள் தங்கள் பெயரையும் மேல்விலாசத்தையும், சென்னை ஜார்ஜடவுன் தம்புசெட்டி வீதியிலுள்ள Mrs. L. Pancharatnam அம்மாளுக்குத் தெரிவிக்கவேண்டியது.

Miss P. Grover அம்மாள் வீட்டில் டிசம்பர்மாதம் 6-ந் தேதி திங்கட்கிழமை நடக்கும் கூட்டத்தில் இதைப்பற்றித் திட்டமாய் அறிவிக்கப்படும்.

## THE FIRST ADVENT OF CHRIST

## கிறிஸ்துவின் முதல் வருகை

இஸ்ரவேல் ஜனங்கள் எகிப்தின் அடிமைத்தனத்திலிருந்த காலத்தில் அவர்களடைந்த நிஷ்டூரங்களுக்குக் கணக்கு வழக்குகளில்லை. அவர்கள் அவ்வளவு கஷ்டமடைந்த காலம் மகா கறுப்புக்காலம், அந்தகாரம் பூண்டிருந்த காலமென்றே சொல்லலாகும். மகா சங்கடம் நேர்ந்திருந்த அக்காலத்தில் ஒரு பெரிய வெளிச்சம் மோசே என்பவன் மூலமாய்த் தோன்றிற்று. அவன் பிரமிக்கத்தக்க அற்புதங்களை நடப்பித்து எகிப்தியராகிய கொடியரின் மத்தியிலிருந்து இஸ்ரவேலரைப் பிரித்து மீட்சியுண்டாக்கினன். அப்பொழுது யேகோவாவால் குறிக்கப்பட்ட பஸ்கா என்ற பண்டிகையை மீட்கப்படப் போகிற இஸ்ரவேலருக்கு ஏற்படுத்தினன். அந்த வேளையில்தானே அவர்களுக்குப் போதித்தது யாதெனில், அப்பண்டிகை மீட்சியின் நினைவுகூருதலுக்காகத் தொன்றுதொட்டு அங்கீகரிக்கப்படவேண்டுமென்பதுதான். எகிப்தின் அடிமைத்தனத்திலிருந்து புறப்பட்ட அன்று முதல் இக்காலம் வரைக்கும் வருஷத்துக்கு ஒரு முறை பஸ்காப்பண்டிகையை அநுசரிப்பது யூதர்களுக்கு வழக்கமாயிருக்கிறது. அதுபோல இயேசுகிறிஸ்துவாகிய பராபர வள்ளல் பூலோகமானது மனுமக்களுடைய பாவத்தினல் அந்தகாரப்பட்டுச் சொல்லிமுடியாத நிர்ப்பந்தங்களால் நிறைந்துபோயிற்றென்று கண்டு, சுமார் இரண்டாயிரம் வருஷங்களுக்குமுன் ஜெகத்துக்கு அதிசய ஒளியாக மானிடாவதாரம் பூண்டு தோன்றினர். இதை நினைவுகூரும் பொருட்டுத்தான் இக்கிறிஸ்மஸ் பண்டிகை வருஷத்துக்கு ஒருமுறை ஞாபகச்சின்னமாகப் பக்தர்களால் அங்கீகரிக்கப்பட்டு வருகிறது. புற மதஸ்தர்களுக்கும் அநேக பண்டிகைகளுண்டு. அப்பண்டிகைகளை அவர்கள் அநுசரிக்கிற விதம் முற்றிலும் உலோக சிற்றின்பங்கள் பொருந்திய தன்மையுடையன. அப்பண்டிகைகளின் நோக்கமும் சாதிப்பும் சரீர சுத்திக்கும் மாங்கிஷ போஷிப்புக்கும் உரிய முறைகளை யுடையவைகளுமாயிருக்கின்றன. தங்களைச் சுற்றிலுமிருக்கிற புற மதஸ்தர்களைக் கண்ணுற்றுக் கிறிஸ்தவர்களும் தங்கள் பண்டிகைகளும் அப்பேர்க்கொத்தவைகள் என்றெண்ணி கொண்டாடப் பார்க்கிறர்களென்பதை நோக்குங்கால் மகா சஞ்சலமான காரியமென்று யாரும் சொல்லலாகும். கிறிஸ்துவின் அவதாரத்தினலுண்டான நன்மைகள் மாட்சிமைபொருந்தினதாக விருக்கின்றன. கிறிஸ்துவின் அவதாரம் ஆத்தும ஈடேற்றத்துக்கும் இனி வரப்போகிற ஜீவியத்துக்கும் உரியதாயிருக்கிறது.

ஆகையால் அப்பண்டிகையைப்பற்றி நன்குணர்ந்துகொள்வது நன்மையாயிருக்கும்.

கிறிஸ்து பிறந்த பண்டிகையில் கவனிக்கவேண்டிய குறிப்புகளாவன:

முதலாவது. எல்லா ஜனத்துக்கும் மிகுந்த சந்தோஷத்தையுண்டாக்கும் நற்செய்தி. லூக். 1 : 10.

'சந்தோஷம்', 'நற்செய்தி' என்ற பதங்கள் எல்லாப் பாஷைகளிலும் எவ்வகையான மனுஷருக்கும், சிறந்தவைகளும் விரும்பப்படத் தக்கவைகளுமாயிருக்கின்றன. கிறிஸ்துவின் பிறப்பினால் எல்லாப் பூலோக மனுப்புத்திரர்களுக்கும் சந்தோஷம் கூறப்பட்டது. ஆம், ஐந்து வருஷங்களாய் ஐரோப்பாவில் நடந்த பயங்கர யுத்தம் முடிவு பெற்ற நாள் எவ்வளவு சந்தோஷகரமான நாளாயிருந்தது! உள்ளபடி அந்த யுத்தத்தினால் பெரும் நஷ்டமடைந்த பேர்களுக்கு யுத்தம் முடிந்தது என்ற செய்தி அளவுக்கடங்காத சந்தோஷத்தை யுண்டாக்கியிருக்கும். அவ்விதமே உலகமுண்டானதுமுதல் மூவாயிரம் நாலாயிரம் வருஷங்களாய் பாவத்தில் கெட்டழிந்துபோன மனுக்கோடிகளுக்கு கிறிஸ்துவின் பிறப்பினால் எவ்வளவு சந்தோஷமுண்டாகும்! பாவத்தின் கெடுதிகளையும் அதினாலுண்டான அழிவையும் நன்குணர்ந்தவர்களுக்கு நிச்சயமாகவே சந்தோஷந்தான். கிறிஸ்தவர்களுக்கு இந்த சந்தோஷ செய்தி எப்படியிருக்கிறது? பாவத்தின் கெடுதிகள் கிறிஸ்துவின் அவதாரத்தினால் ஒழிந்துபோயிற்று? இன்னமும் திகில்கள், பாவப் பயங்கரங்கள், பாவப் போராட்டங்கள் இருதயத்திலே குடிகொண்டிருக்குமானால் நற்செய்தியும் சந்தோஷமும் வருஷா வருஷம் கூறப்பட்டாலும் என்ன பிரயோஜனம்! ஆகையால் நல் உணர்வோடே இந்தச் சந்தோஷத்தை அநுபவிப்போமாக. அதை ஏற்றுக்கொள்வோமாக.

இரண்டாவது. கிறிஸ்து என்னும் இரட்சகர். லூக். 1 : 11.

கிறிஸ்து என்றால் அபிஷேகம் பெற்றவர். இரட்சகர் என்றால் மனுஷரைப் பாவத்தினின்று இரட்சிக்கிறவர். அதாவது மனுஷரைப் பாவத்தினின்று இரட்சிக்க அபிஷேகம் பெற்றவர் என்று அர்த்தமாம். கிறிஸ்து உலகத்தில் வந்து தேவன் எத்தன்மையுடையவரென்றும் அன்பாவது என்னவென்றும் விளக்கிக் காட்டினதுமன்றி தம்மூழியத்தினாலும், பாடுகளினாலும், மரணத்தினாலும், உயிர்த்தெழுதலினாலும், பரமேறுதலினாலும், எத்தனையோ கோடிக்கணக்கான மாந்தர்கள் ஆத்தும ஈடேற்றத்தை யடைந்து சந்தோஷித்துப் பூரிக்கும்படி செய்திருக்கிறார். அளவிறந்த நன்மைகள் உலகுக்கு உண்

டாயிற்று. ஆனால் கிறிஸ்தவர்களாயிருந்துகொண்டு மன மாறாத லில்லாமல் எத்தனை வருஷமிருந்தாலும், எத்தனை கிறிஸ்மஸ் பண்டிகைகளைக் கொண்டாடினாலும் கடுகளவு பிரயோஜனமுமில்லை. அவர்கள் அதிக கணக்குக் கொடுக்கவேண்டியவர்களாயிருக்கிறார்கள். குணமாறாமல், பாவம் நீங்காமல், பழைய துர்ச்சுபாவம் கொஞ்சமென்கிலும் ஒழியாமல் இருக்கும்போது கிறிஸ்மஸ் என்ன கிறிஸ்மஸ்! அவர்கள் பாவத்தோடே பாவத்தைக் கூட்டிச்சேர்க்கிறவர்களாயிருந்து அநேக புறமதஸ்தர்கள் மத்தியில் இடறல்களாயிருந்து தங்களுக்குத் தீமையை வருவித்துக்கொள்ளுகிறவர்களாய் இருக்கிறார்கள். இப்படிப்பட்டவர்கள் பண்டிகை தினத்தில் சாப்பாட்டுக் காரியங்களைப் பற்றியும், உடைகள் பட்டுகள் வாங்குகிறதைப்பற்றியும், நகைகள் செய்கிறதையுமே மனதிற்கொண்டு கிறிஸ்துவை முற்றிலும் மறந்து வெளிவேஷ மார்க்கமாக்கிப்போடுகிறார்கள். இது சபைக்குள்ளே, கோவில்களுக்குள்ளே, குடும்பங்கள் மத்தியிலே, சாத்தான் வைத்த சதியோசனை என்றே சொல்லவேணும். உலக சிந்தையாயிராமல் கிறிஸ்துவின் சிந்தையாயிருப்போமாக. சாப்பிடுகிறது, உடுக்கிறது இன்னோர் நாளில் செய்துகொள்ளலாம். ஆனால் நாம் இந்த அவதாரம், மகிமை துறத்தல், பாவத்தின் கொடுமை, நம்முடைய நிலமை, கணக்கற்ற புறமதஸ்தர் சாத்தானால் பாவமாகிய அந்தகாரச் சங்கிலியினால் கட்டப்பட்டு இயேசுகிறிஸ்துவின் மீட்பில்லாமலிருக்குதல், இவைகளைச் சிந்தித்து தக்க முறைகளை உபயோகித்தால் எவ்வளவு நன்மையை யுண்டாக்கும்! கிறிஸ்து மார்க்கமும், பண்டிகைகளும் பேச்சும் புசிப்பும் குடிப்புமல்ல, பெலத்திலேதானிருக்கிறது. ஓர் பக்தியுள்ள உத்தம கிறிஸ்தவனுக்கு எல்லா நாட்களும் ஓய்வுநாட்கள்தான், எல்லா நாட்களும் பண்டிகை தினங்கள்தான், எல்லா நாட்களும் விசேஷித்த நாட்கள்தான். ஆகையால் கிறிஸ்துவை யணிந்து அவர் சிந்தையாயிருப்பதே கிறிஸ்மஸ் பண்டிகை.

**மூன்றாவது.** தேவனுக்கு மகிமை, பூமியிலே சமாதானம், மனுஷர்மேல் பிரியம். லூக். 2 : 14.

கிறிஸ்துவை உலகத்தில் அனுப்பினதினாலே பிதாவாகிய தேவனுக்கு மகிமையுண்டாயிற்று. அவருக்கு எல்லா மகிமையுமுண்டு. ஆனால் பாவிகளை இரட்சிக்கக் கிறிஸ்து பூலோகத்துக்கு மனுஷாவதாரமாய் வந்ததினால் அவருக்கு இன்னமும் மகிமையுண்டாயிற்று. மற்றப்படி தம்முடைய மகிமைக்குக் குறைவு என்பதுபோல பாவிகளுக்கு தம்மன்பை விளங்கப்பண்ணினார். தேவன் பார்த்து மனுஷர்கள் குறைவை நிவிர்த்திசெய்தபோது பூமிக்குச் சமாதானமிராதா! ஒரு பெரிய ராஜா ஒரு அற்பமான மனுஷனை உயர்த்தும்போது அந்த

மனுஷனுக்கு எவ்வளவு சந்தோஷமும் சமாதானமும் இருக்கும்! பாவந்தான் தேவனுக்கும் மனுஷனுக்கும் இடையிலே தடுப்புச் சுவர் போல் நின்றது. மனுஷன் கடவுளைப் பார்க்கக்கூடாதவனாயிருந் தான். ஆனால் இப்போதோ கிறிஸ்துவின் மூலமாய் தேவனை நிமிர்ந்து பார்க்கக்கூடியவனாயிருக்கிறான்; அவரோடு தாராளமாய்ப் பேசக் கூடியவனாயிருக்கிறான்; எந்த நன்மையையும் பெற்றுக்கொள்ளக் கூடியவனாயிருக்கிறான். ஏன்! கிறிஸ்துவின் பிறப்பினால் மனுஷர் மேல் பிரியமுண்டானதினாலேதான். நாம் இப்படிப்பட்ட சந்தோ ஷத்தை அனுபவிக்கும்போது இப்படிப்பட்ட சந்தோஷ செய்தியை நம்மைச் சுற்றிலுமிருக்கிற ஜனங்களுக்கு அறிவிக்க எவ்வளவு ஆவலாயிருக்கவேணும். சுவிசேஷம் அறிவிக்கப்பட ஏற்ற ஏற்பாடு களைச் செய்ய இந்தப் பண்டிகையிலே துவங்குவோமாக. அப்பொ ழுது தேவனுடைய பூரண சந்தோஷமும் பிரியமும் நம்மேலுண்டா யிருக்கும்.

V. D. Kailasam.

## THE SECOND ADVENT OF CHRIST

## கிறிஸ்துவின் இரண்டாம் வருகை

('சென்றான் சென்றான்' என்ற நடைப்படி பாடலாம்.)

இராகம், மத்தியமாவதி. அடதாளசாப்பு.

பல்லவி

வருவார் வருவார் கிறிஸ்து—முகில்மேலே
வருவார் வருவார் கிறிஸ்து.

அனுபல்லவி

வந்தவ ரொருகால மிந்தப் பூவியின் மீது
வலுபாவ நாசஞ்செய்து பரலோகஞ் சென்றவர்— வருவார்

1

பரிவாக மானிடர்க்காய்—தம்மைப் பரிகார மாகச்செய்தவர்
பட்சம்வைத் துலகோர்க்காய்த்—தம்மை தத்தம் சமர்ப்பித்தவர்
பாரினி லுள்ளவரைக் கூவி யழைத்தவர்
பாகதி வாழ்வைப் பகர்ந்தீவே னென்றவர்
படியோர் களின்மேற் பரிதாபங் கொண்டவர்
பரனோடு பாவிகளை உறவாகச் செய்தவர்— வருவார்

2

பாதாளத்திற் சென்று திறவு—கோலை கொண்டு ஏகிச்சென்றவர்
பிசாசின் சிரத்தை யொடித்துப்—பக்தரை பரகதி சேர்ப்பேனென்றவர்
பொல்லாத உலோகத்தின் பவமெல்லாம் ஜெயித்தவர்
பேரதி சயங்களைச் செய்து ஜொலித்தவர்
புண்ணிய னெனப்பெயர் புவியினிற் தரித்தவர்
பிரமிப் புண்டாகவே பிரசங்கஞ் செய்தவர்— வருவார்

3

இரண்டாம் விசை வருகை—வெகு பயங்கரமா யிருக்கும் [கும்
இரவிற் திருடன் வரும்போல—அவர்வருகை எதிர்பாராக் காலமிருக்
இங்குமங்கு மோடிற் தத்தளிப்பா யிருக்கும்
இரவும் ஒளியா யெங்கும் பிரகாசிக்கும்
இழிவான பாவஞ்செய்தோர் எங்கேயோடிச் சென்றாலும்
இறைவன் காமவரை யெட்டிப் பிடித்திழுக்கும்— வருவார்

4

வானம் மடமடென்க—ஆகாய சத்துவங் குலுங்கியதிர
வரைகடந் தேகித் தரையில்—தூதர்கண மூதும் எக்காளத்தோடே
வந்துவுலகின் நாலா திக்குதிசையிற் சென்று
வாகாக மனுஷரை ஏகமாய்ச் சேர்த்துமே
வல்லகர்த்தன் முன்பு ஏகமாய்க் கூட்டியே
வரிசை வரிசையாக அவர்முன்பு நிறுத்துவார்— வருவார்

5

கோடானுகோடி தூதர்கள்—அவரைச் சூழ்ந்து கும்பலாக வருவார்
கோதில்லாப் பரிசுத்தர்கள்—அவரைச் சூழ்ந்து தோத்திரகீதம் படிப்
கோமானேசு வப்போ வுலகத்தோர் பார்க்கவே [பார்
கிரீடாதி பதியாகப் பிதாவின் மாட்சிமையோடு
கீழிறங்கி யாரும் திகில்கொண்டு அதிர்ந்திட
கேடாளர் யாவரும் குலுங்கி நடுங்கிட— வருவார்

6

ஜோதிய ரேசுபெருமான்—பன்னருஞ் சர்வாதி காரத்தோடும்
சாற்றரும் மகிமையோடும்—சர்வ சிட்டோர்கள் சங்கத்தோடும்
சக்ர வர்த்தியாக சகல மனுடரையும்
சாஷ்டாங்கஞ் செய்திட கூட்டியே சேர்த்திடுவார்
சகல மனுஷரும் அவர்பாதம் பணிகுவார்
சத்ய விரோதிகளைச் சங்காரஞ் செய்குவார்— வருவார்

7

பக்தர்க ளேகோபித்துப் புதுப்-பாட்டொன்று ஆலாபிப்பார்
பற்பல இராகங்களினுல் ஏசுபுகழ் பரிவாக இசைசெய்குவார்
பாசம்பொங்கிப் பல கவிவாண ரெழும்புவார்
பாட்டினுற் தம்மன்பை பகர்ந்து துதிசெய்வார்
பாலனும் சிற்றுக்கவி வேத நாயகனும்
பாண்பாகச் சுவிசேஷ மாண்பைப் புகழ்ந்திடுவோன்.— வருவார்

D. V. Kailasam.

## WORLD'S NEWS

## உலக வர்த்தமானங்கள்

சீனு தேசத்தில் பஞ்சமுண்டாகி ஐந்து மாகாணங்களில் அதிக மும்முரமாயிருக்கின்றது. இதினுல் ஐந்து கோடியே எண்பது லட்சம் ஜனங்களுக்கு அதிகக் கஷ்டமுண்டாகியிருக்கிறது. அதில் ஒரு கோடியே நாற்பது லட்சம் ஜனங்கள் ஆகாரக் குறைவினுல் நிர்ப்பாக்கிய திசையிலிருக்கிருர்களாம். இதை நிவிர்த்தி செய்வதற்கு ஐந்து கோடிப் பவுன் தேவையென்று உத்தேசிக்கப்பட்டிருக்கிறதாம்.

தென் ருஷியாவில் கிரிமியாவுக்குச் சமீபத்தில் ரெட்ஸ் என்ற பால்ஜவிக் சேனைக்கும் ஜெனரல் ராங்கலின் சேனைக்கும் கடும் யுத்தம் அநேக காலங்களாய் நடந்துகொண்டுவருகிறது. தற்சமயத்தில் ருஷ்யர்கள் அதிகக் கடினமாய்த் தாக்குகிறபடியால் இருகட்சிக்காரருக்கும் பெருத்த நஷ்டமுண்டாகியிருக்கிறது. என்னமாய் முடியுமோ தெரியாது.

போலண்டுகாரருக்கும் ருஷ்யருக்கும் பெருத்த யுத்தம் அநேக மாதங்களாய் நடந்து போலண்டுக்காரர் ஜெயகெம்பீரர்களானுர்கள். ஆகவே இருதிறத்தாருக்கும் சமாதான உடன்படிக்கை யுண்டாகியிருக்கிறது.

தற்காலத்தில் உலகமுழுவதிலும் ஏறக்குறைய அநேக ராஜ்யங்களிலும் தேசங்களிலும் பெரும் மாறுதல்கள் நேரிட்டுக்கொண்டு வருகின்றன. உள்நாட்டுக் கலகங்களினுல் ஏராளமான பேர் மாண்டுபோனுர்கள். இதற்குக் காரணம் ராஜாங்க விவாதத்தைப் பற்றினதுதான். நம்முடைய இந்தியா தேசமும் அப்படிப்பட்ட பயங்கர நிலைமைக்கு வராதபடி காந்தி என்பவரும் அவரைச்சேர்ந்த மகான்களும் மாட்சிமைதங்கிய கருணைநிறைந்த கவர்ண்மென்ருேடே

ஒத்திணங்கி பெரும் நன்மைகளைப் பெற்றுக்கொண்டால் நலம். அப்படி இசைந்து சீர்திருத்தங்கள் செய்தால் உயிர்நஷ்டம், பொருள் நஷ்டமில்லாமல் எல்லாம் நன்மையாய் முடியுமென்பதற்குச் சந்தேகமில்லை.

ஐர்லாந்து தேசத்தின் நிலைமை இன்னும் சீர்கெட்டதாகத்தான் இருக்கிறது. அதிகமான உயிர்நஷ்டங்கள் பொருள்நஷ்டங்கள் பிரதிதினமும் சகஜமாய் நடந்துகொண்டுவருகின்றன. இவைகளை நிவிர்த்திக்கும்பொருட்டு கவர்ண்மென்ருர் அநேக பிரயத்தனங்களைச் செய்துவருகிருர்கள்.

கனம் ஹார்டிங் என்பவர் அமெரிக்கா தேசத்திற்குப் புது பிரசிடெண்டாகத் தெரிந்துகொள்ளப்பட்டிருக்கிருர்.

ஓர் ரெயில்வே விபத்து.—நவம்பர் மாதம் 3-ந் தேதி எழும்பூர் ஸ்டேஷனுக்கு ஆபீசர்கள் ஏற்றிய ரெயில் வரும்போது மிதிபலகையில் நின்றவர்கள் பக்கத்தில் நின்ற டிரக் வண்டியில் மோதியதால் இரண்டுபேர் படுகாயப்பட்டு ஜெனரல் ஆஸ்பத்திரிக்குக் கொண்டு போகப்பட்டார்கள்.

## I COME TO THEE MY SAVIOUR, AS I AM

## இரட்சகரிடத்தில் சேருதல்

இராகம், மலையாமி. திரிசுரதாளம்.

பல்லவி

பாவி எனைக் காரும்—தேவே
பாதக ஞனுலும்.

மேவிநீர் கல்வாரி மேட்டினிற் சிந்திய
மேன்மை உதிரபலம்—கெட்ட
பாவியா மென்னையும் மீட்க மாவல்லதே
பார்த்திபா வந்தேன் வந்தேன்— பாவி

என்நீச கோலமாய் என்நீதி கந்தையென்
றெண்ணி வருகின்றேனே—மன்னு
உன் னுதிரத்தினு லென்னையும் சுத்திசெய்
ஓடிநான் வந்தேன் வந்தேன்— பாவி

நான்நீச பாதகனு னுலும் கிர்பையாய்
நாதனெனைக் காரும்—ஓகோ
கோனு ருதிரத்தா லென்னையும் மீட்கச்செய்
கொற்றவா வந்தேன் வந்தேன்— பாவி

நான்நீச பாதகனு னாலும் ஏழையாம்
நாயெனைக் காருமையா—ஓகோ
ஏன்இந்த அன்பு குருசினிற் காட்டினீர்
என்பரா வந்தேன் வந்தேன்— பாவி

எங்கே நானோடுவேன் பாதகன் நானையா
ஏசுவே உம்சரணம்—என்னை
ஏற் றுதிரத்தினுல் மீட்டுக் கழுவிடும்
ஏகனே வந்தேன் வந்தேன்— பாவி

கடன்களெல்லாம் தீர்க்கச் சேவை விட்டவென்
கர்த்தனே யென்கடனும்—முற்ருய்
அடங்க நிவிர்த்திசெய் துந்த னருளினுல்
ஆறுதல் செய்வாயே— பாவி

எங்கே நானோடுவேன் பாதகன் நானையா
ஏசுவே உம்சரணம்—எந்தன்
பங்குகதி வேறு இல்லையே அப்பனே
பாதகன் வந்தேன் வந்தேன்— பாவி

யேசுவன் ராசாநீர் கூப்பிட்டதால் வந்தேன்
என்னையு மேற்றிடுமேன்—ஓகோ
நீசன்நான் ராசனின் சத்தத்தைக் கேட்டேனே
நீதிபா வந்தேன் வந்தேன்— பாவி

பாவத்தா லுண்டான துன்பங்க ணீங்கிடப்
பார்த்திபா பாடுபட்டீர்—அந்த
ஆபத்தால் கல்வாரி மேட்டில் அகற்றினீர்
அன்பா நான் வந்தேன் வந்தேன்— பாவி

குற்றமா தீங்குகள் செய்தேனே யானுலும்
கொற்றவா நின்மரணம்—பலன்
சற்றுங் கறையிலா தென்னையு மாக்கிடும்
சற்பரா வந்தேன் வந்தேன்.— பாவி

Late Rao Saheb J. L. Christmas Pillai,
Diwan of Singampatti.

## CHRIST'S TRANSFIGURATION

## இரட்சகரின் மறுரூபம்

நமது அருமைநாதராகிய இயேசு கலிலேயா கடலின் வட திசையிலுள்ள செசாரியா பிலிப்பு பட்டணத்திலிருந்து பேதுரு, யாக்கோபு, யோவான் என்ற மூன்று சீஷரை அழைத்துக்கொண்டு, உயரமான ஓர் மலையிலேறி அங்கே ஜெபித்துக்கொண்டிருந்தார். அச்சமயத்தில் அவரில் ஒரு பெரிய மாறுதல் காணப்பட்டது. அவருடைய முகம் சூரியனைப்போல பிரகாசித்தது, அவருடைய வஸ்திரம் வண்ணான் ஒருகாலும் வெளுக்கக்கூடாத அவ்வளவு வெண்மையாக இலங்கினது. மோசே, எலியா என்ற இருவர் அவருடன் சம்பாஷிக்கிறவர்களாய்க் காணப்பட்டார்கள். அந்த மூன்று சீஷரும் இக்காட்சியைக் கண்டு, பிரமைகொண்டு அங்கே தானே எப்பொழுதும் இருந்துகொள்ளலாமென்று ஆசைகொண்டார்கள். உடனே ஒரு மேகம் காணப்பட்டு அதிலிருந்து 'இவர் என்னுடைய நேசகுமாரன், இவரில் பிரியமாயிருக்கிறேன், இவருக்குச் செவிகொடுங்கள்' என்று இயேசுவைக் குறித்து அசரீரி வாக்குப் பிறந்தது. இந்தக் காட்சியிலிருந்து நாம் கற்றுக்கொள்ளும் சில பாடங்களாவன :

1. இதில் ஜெபத்தின் வல்லமையைக் காண்கிறோம். இரட்சகர் ஜெபித்துக்கொண்டிருக்கையில் இந்த மறுரூபத்தைப் பெற்றார். நண்பர்களே, நீங்கள் ஜெபித்துக்கொண்டிருக்கையில் உங்களுக்குள்ளே மாறுதலைப் பெற்றீர்களா? நீங்கள் பிறருக்காக ஜெபிக்கும்போது அவர்களுக்குள்ளே மாறுதலைக் கண்டிருக்கிறீர்களா? உங்கள் பிள்ளைகளுக்காக ஜெபித்தபோது அவர்களுக்குள் மனமாறுதலைக் கண்டீர்களா?

2. இரட்சகர் மறுரூபமானபோது அவர் தமக்கு இல்லாத ஒரு ரூபத்தைப் பெற்றுக்கொள்ளவில்லை. அவர் பூமியிலிருந்தபோது காணப்பட்டதுதான் பாடுள்ள மறுரூபம், இப்போது அவர் மலையில் காணப்பட்டது அவரது இயற்கையான மகிமை. தமது சுயரூபத்தை இங்கே காட்டினார். ஆ! அது எவ்வளவு மாட்சிமைபொருந்தினது! நாமும் ஆண்டவர் நமக்கு ஆதியில் கொடுத்த சுயரூபத்தை அடைந்துகொள்ளுகிறதானால், அதற்கு நிகர் உண்டோ?

3. இதில் பழைய ஏற்பாடும் புதிய ஏற்பாடும் ஒன்றென ரூபகாரமாகிறது. யூதர்கள் இயேசுவின் போதனையைச் சரியானபடி விளங்கிக்கொள்ளாமல் அவர் பழைய ஏற்பாட்டுக்கு விரோதமானவர்

என்று நினைத்தார்கள். அப்படியல்ல. பழைய ஏற்பாடு ஆரம்பம், புதிய ஏற்பாடு முடிவு; பழைய ஏற்பாடு நிழல், புதிய ஏற்பாடு பொருள். பழைய ஏற்பாட்டு மகான்களாகிய மோசேயும் எலியாவும் தங்களுடைய பணிவிடையை இயேசுவின் பாதத்தில் வைத்து, அவர் எருசலேமில் நிறைவேற்றப்போகிற மாட்சிமையான சுய யாகத்தைக் குறித்துச் சம்பாஷித்துக்கொண்டிருந்தார்கள். மேலும் கடவுள் கொடுத்த சாட்சியினாலே இயேசு மற்றெல்லோருக்கும் மிக்க மேலானவரென்று ரூபிக்கப்பெற்றார்.

4. இது இயேசு எருசலேமில் நிறைவேற்றப்போகும் சுய யாகத்துக்கு அவரை முஸ்திப்புச் செய்தது. பிரயாணிகள் வழிக்கு முஸ்திப்புச் செய்வதுபோலும், யுத்தவீரர் யுத்தத்துக்கு முஸ்திப்புச் செய்வதுபோலும், இக்காட்சி இயேசுவை அவருடைய பாடுகளுக்கு முஸ்திப்புச் செய்தது. கெத்செமெனே பாடுகள் சாமான்யமான வையா? ஆசாரியன் வீட்டிலும், சங்கத்தின் முன்பும், பிலாத்துவின் அரமனையிலும் அவர் அடையப்போகிற அவமானங்களும் இம்சைகளும் இலேசானவையா? சிலுவையில் ஆணிகளால் கடாவப்பட்டு, ஈட்டியால் குத்தப்பட்டுப் பாவிகளின் நிந்தனைக்கும் பரியாசத்துக்கும் இடமானது இம்மட்டென்று சொல்லக்கூடுமா? இவ்வளவுக்கும் அவருக்கு ஊக்கம் கொடுத்தது என்ன? அவர் பிதாவின் சமுகத்தில் அடையப்போகிற மகிமைக்கு அச்சாரமான மறுரூபமல்லவா? சிநேகிதர்களே, நீங்கள் உங்களுக்கு வரும் பாடுகளை எதனால் தாங்கிக் கொள்ளுகிறீர்கள்? இக்காலத்துப் பாடுகள் இனிவரும் மகிமைக்கு ஈடானவை அல்ல என்று நினைக்கிறீர்களா?

5. இது சீஷருடைய விசுவாசத்தைத் திடப்படுத்தும் காட்சியாயிருந்தது. அவர் பிடிபட்ட சமயத்தில் இக்காட்சியை நோக்கச் சற்று மறந்தார்கள்போலிருக்கிறது. பின்னுடி இதை நினைத்துத் திடங்கொண்டார்கள். நேசர்களே, நீங்கள் இக்காட்சியை உற்று நோக்கிப் பார்த்தால் உங்கள் விசுவாசம் கொழுந்துவிட்டெரியாதா? மானுட ரூபமாய்க் காணப்பட்ட ஆண்டவரை ஏற்றி ஏற்றித் தொழ மாட்டீர்களா?

6. இது மறுமையை நமக்குக் காட்டும் கண்ணுடியாயிருக்கிறது. மரணத்துக்குப் பின்னுள்ள நிலைமையைக் குறித்து உலகத்தார்க்குத் தெளிவில்லை. நமக்கோ இது உள்ளங்கை நெல்லிக்கனிபோலிருக்கிறது. ஆயிரம் வருஷத்துக்கு முன்னிருந்த மோசேயும் எலியாவும் திரும்ப மகிமையோடே வருகிறதாயிருந்தால், நண்பனே நீயும் நானும் மரணத்துக்குப்பின் இருக்கமாட்டோமா? சந்தேகமின்றி

இம்மை கடந்தவுடன் மறுமைக்குட்பட்டு நாம் நேசிக்கிற, நம்மை நேசிக்கிற இரட்சகரைக்கண்டு களிகூர்வோம், இந்த நினைவு நம்மைத் தேற்றக்கடவது.

Y. J. Taylor.

## LIFE OF LATE
## Mrs. ARULAMMAL NOAH GNANADICKAM

## கனம் அருளம்மாள் ஞானதிக்கம் அம்மாள் ஜீவிய சரித்திரம்

(தொடர்ச்சி)

அன்றியும் அந்த மருமக்கள்மாரும் தெய்வபயத்துடன் ஜீவித்து தங்களுக்குக் கிடைத்திருக்கும் ஊழியங்களை உண்மையோடு நடத்தி நல்ல பெயரெடுத்து, கவர்ண்மென்ட் வேலைக்காரராக இருந்தாலும் எத்தனை அவசரஜோலி யிருந்தாலும் காலை மாலை குடும்பஜெபங்கள் தவறாது நடத்தி சந்தோஷமாயும் சமாதானமாயும் வாழ்ந்து, குறை கூறாது இவர்களுக்கும் சந்தோஷத்தைக் கொடுக்கக்கூடியவர்களாகவே இருந்தார்கள்.

இதுவுமன்றி இவர்கள் ஏகபுத்திரனுக்கு வாய்த்த பெண்ணும் அழகிலும் குணத்திலும் சிறந்ததெனவே சொல்லவேணும். திருநெல்வேலியில் பிறந்து வளர்ந்த பெண்ணாயினும், தஞ்சை சங். சாஸ்திரியாரவர்கள் வீட்டுக்கு எல்லா விஷயங்களிலும் ஒத்து நடந்துகொள்ளக்கூடிய நற்குணசாலியாகக் கிடைத்ததும் தேவகிருபையே. 'மாமியார் மெச்சிய மருமகளில்லை' எனப் பழமொழியுண்டு. ஆனால் ரூத்தும் நகோமியும் போல இவர்களும் இவர்களுடைய மருமகளும் ஒருவருக்கொருவர் நட்பாயிருப்பதும், தன் மருமகள் மதனி சம்பந்திமாருக்கு ஏற்க நடந்து நட்புடன் உறவாடி ஒற்றுமையாயிருப்பதும், தன் மாமன் மாமியார் இவர்களுடைய சுகவீனத்தில் மருமகள் கவலையுடன் கரிசனையாய் ஊழியம் செய்வதும் கவனிக்குங்கால், இவர்கள் ஒருவர்பேரில் ஒருவர் வைத்திருக்கும் களங்கமில்லாத மாயமற்ற சிறந்த அன்பே எனக் கூறலாம்.

'ஆ! சகோதரர் ஒன்றாய்
ஏகமான சிந்தையாய்
சஞ்சரித்தால் எத்தனை
நேர்த்தியான இனிமை!'

இந்த அம்மாள் தன் மாமியாருக்கு எவ்வித அன்புடன் நடந்து கொண்டார்களோ, அந்தப்படியே இவர்களுக்கும் அந்தியகாலத்திலும் சடையாது கவனித்து நடத்தும் நற்குணசாலியான மருமகளை தேவன் கடாக்ஷித்தார். இதுவும் இவர்கள் வீட்டுக்குக் கிடைத்த ஆசீர்வாதங் களில் ஒன்றென்கலாம். இதினாலே அவர்கள் பெரிய குடும்பத்தில் சமாதானம் நிலைபெறவும் இடமாயிற்று.

இந்த அம்மாள் வேதவாசகங்களையும் பக்திக்குரிய புஸ்தகங்களையும் வாசிப்பதுபோல தன் மருமகளும் வேலையொழிந்து இருக்கும் நேரங் களில் பக்திக்குரிய புஸ்தகங்களை வாசிக்கப் பழக்குவித்தார்கள். இவர்கள் யாவரோடும் சாந்தமாயும் அன்பாயும் அருமையாயும் சுகக்ஷேமாதி காரியங்களை விசாரித்துப் பேசுவார்கள். ஆனால் வீண்பேச்சுகளும் கட்டுக்கதைகளும் அவர்களுக்குப் பிரியமிராது.

(இன்னும் வரும்.)

## NOTICE

## விளம்பரம்

நீலகிரியிலும், சென்னையிலும், வேலூர் வட்டகையிலும், திருநெல்வேலியிலும் சுவிசேஷ ஊழியத்தில் வாஞ்சையுள்ள வேதா கம ஸ்திரீகள் இந்துக்களுக்குள் வேலைநடத்த தேவை.

30 வயது முதல் 40 வயது வரையுள்ள சுவிசேஷ வேலையில் கருத் துக்கொண்டவர்கள் இந்த வேலைக்காகத் தங்களை ஒப்புக்கொடுத்து தங்களுக்குப் பிரியமான இடத்தைக் குறிப்பிட்டு, சென்னை கனம் P. குரோவர் அம்மாளவர்களுக்கு பின்வரும் மேல்விலாசம் போட் டுத் தெரியப்படுத்தலாம்: Miss P. Grover, C. E. Z. M. House, Vepery, Madras.

வேலை துவக்குமுன் யாருக்காவது இவ்வேலையில் பயிற்சி வேண்டுமென்று விரும்பி தெரியப்படுத்தினால் அதற்கேற்ற ஏற்பாடு கள் செய்யப்படும்.

JL
T55 m 311, N11
N20
162017
600 008.

## LESSONS FOR FAMILY WORSHIP

# வேத வாசிப்பு ஒழுங்கு

### 1920-௵ டிசெம்பர்௴

| | | | | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | பு. | ஏசா. | 1. | 1—17 | 11 | ச. | ஏசா. | 25. | 1—12 | 21 | செ. | ஏசா. | 35. | 1—10 |
| 2 | வி. | ,, | 1. | 18—31 | 12 | ஞா. | ,, | 26. | 1—13 | 22 | பு. | ,, | 38. | 1— 8 |
| 3 | வெ. | ,, | 2. | 1—17 | 13 | தி. | ,, | 27. | 1—13 | 23 | வி. | ,, | 38. | 9—22 |
| 4 | ச. | ,, | 5. | 1—10 | 14 | செ. | ,, | 28. | 9—20 | 24 | வெ. | ,, | 39. | 1— 8 |
| 5 | ஞா. | ,, | 5. | 11—25 | 15 | பு. | ,, | 28. | 21—29 | 25 | ச. | மத். | 1. | 18—25 |
| 6 | தி. | ,, | 6. | 1—13 | 16 | வி. | ,, | 29. | 13—24 | 26 | ஞா. | சங். | 27. | 1—14 |
| 7 | செ. | ,, | 8. | 13—22 | 17 | வெ. | ,, | 30. | 8—21 | 27 | தி. | ,, | 28. | 1— 9 |
| 8 | பு. | ,, | 9. | 1— 7 | 18 | ச. | ,, | 30. | 27—33 | 28 | செ. | ,, | 29. | 1—11 |
| 9 | வி. | ,, | 11. | 1—12 | 19 | ஞா. | ,, | 32. | 1—20 | 29 | பு. | ,, | 30. | 1—12 |
| 10 | வெ. | ,, | 12. | 1— 6 | 20 | தி. | ,, | 33. | 13—24 | 30 | வி. | ,, | 31. | 1—13 |
| | | | | | | | | | | 31 | வெ. | ,, | 31. | 14—24 |

C. L. S. PRESS, MADRAS—1920